[பேரவைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

ஆ. அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை மூன்று உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (சென்ட்) இச் சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு என். ராமச்சந்திரன் (2) திரு என். சுப்பிரமணியன் (3) திரு. கே. சௌந்தரராஜன ஆகியோரின் பதவிக்காலம், 1980 பிப்ரவரி மாதம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்துவிட்டதால், அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாட்களை 31.1.1981 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 2-2-1981 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3.2.1981 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[முற்பகல் 10-50]

இ. கண்டனத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவையின் 71-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன :

"மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களைக் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதத் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது" என்று மாண்புமிகு

1981 ஜனவரி 28

[பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள், திருவாளர்கள் ஆர். உமாநாத், கே. ரமணி, ஆர், கருப்பையா, எம். ஆறுமுகம் ஆகியோரும், ''தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நெடுமாறன், திரு. கே. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. எஸ். ஆண்டித் தேவர் ஆகியோரும், ''மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது'' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் கொடுத்துள்ளனர்.

தீர்மானங்கள் முறைப்படி உள்ளன. எனவே, பேரவையின் 71-வது விதி, உள்விதி (2)ன்படி, இத்தீர்மானங்களை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டும்.

திரு. உமாநாத் அவர்கள் தீர்மானம்தான் முதலில் வரப் பெற்றது. எனவே அத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இடங்களில் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்கள் : தேவையான 24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் தீர்மானத்தை முன்மொழிய இப்பேரவை அனுமதி அளிக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இதை கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு முன்னதாகவே எடுத்துக்கொள்ளலாம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தின் மீது 4—2—1981 அன்று விவாதம் நடைபெற்று அன்றே மாலை 1-30 மணிக்குள் வாக்கெடுப்புக்கு விடப்படும். அக்காலத்திற்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து முடிக்க வேண்டும்.

மற்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்கள், இதே போன்று இருப்பதால் அவை நிறுத்தி வைக்கப்பெறும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அப்படியென்றால் அவைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற கருத்து வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் அவர்களின் பெயர்கள் ஆகியவற்றைச் சொல்லியாகிவிட்டது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் நான் இதைச் சொல்ல வில்லையென்றால் திரும்பவும் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

அனுமதி அளித்த தீர்மானத்தின்மீது பேரவை தனது முடிவை தெரிவித்த பிறகு மற்ற தீர்மானங்கள் குறித்து முடிவு செய்யப் படும்.

ஈ. ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டமுன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. நிலவரி வசூல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.